செய்தி வெளியீடு எண்: 16 நாள்: 9.01.2009

# அரசு செய்தி வெளியீடு

## 9.1.2009

5.1.2009 முதல் அகில இந்திய அளவில் நடைபெறும் லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் மற்றும் 7–1–2009 முதல் தொடங்கியுள்ள எண்ணெய் நிறுவன அலுவலர்கள் பணி நிறுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் பேச்சுவார்த்தைகள் மூலமாக சுமூகமாக முடிந்து இரு தரப்பினரும் மன நிறைவு கொண்டு பாதிப்பிலிருந்து பொது மக்கள் விடுபடுவார்கள் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக தொடர்ந்து நீடித்துக் கொண்டிருப்பது வருந்தத் தக்க ஒன்றாகும்.

2. இந்த நிலையில் அத்தியாவசியப் பொருள்களைத் தேவையான இடங்களுக்குத் தங்குதடையின்றி கொண்டு செல்லத் தேவைப்படும் வாகனங்களை மோட்டார் வாகனங்கள் கட்டாய எடுப்புச் சட்டம், 1970ன் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/சென்னை மாநகர காவல் துறை ஆணையாளர் கட்டாயமாக எடுத்து வாகன ஓட்டுநர்களைக் கொண்டு பெட்ரோல், டீசல் போன்ற பொருள்களை எண்ணெய் நிறுவன சேமிப்பு முனையிலிருந்து போலீஸ் பாதுகாப்புடன் விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கவும்; மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்கள் பொது மக்களுக்கு தடையின்றி கிடைக்க உரிய போலீஸ் பாதுகாப்புடன் நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

3. மேலும் அத்தியாவசியப் பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்காத வாகனங்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களின் உரிமங்கள் ரத்து செய்யப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளதோடு, பெட்ரோல் மற்றும் டீசல் போன்ற பொருள்கள் அனைத்து சேமிப்பு முனையங்களிலிருந்தும் அனுப்பப்பட்டு வருவதாகவும், இப்பொருள்கள் தொடர்ந்து போலீஸ் பாதுகாப்போடு எடுத்துச் செல்லப்படும்

என்றும், அறிவுறுத்தியிருப்பதால் பொதுமக்கள் இந்தப் பொருள்களை தேவைக்கு அதிகமாக வாங்கி இருப்பில் வைத்துக் கொள்வதை தவிர்க்க வேண்டும் என்பதோடு, விற்பனை நிலையங்களிலும் பொது மக்களுக்கு வழங்காமல் கள்ளச்சந்தையில் விற்பனை செய்பவர்கள் மீது மாவட்ட ஆட்சியர்கள் மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

4. பொதுவாக பிரச்சினைகளின் நெருக்கடியை உணர்ந்து அதைத் தடுப்பதற்கும் பொது மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை களைவதற்கும் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு இரு முனைகளிலும் உள்ள இரு சாராரும் சட்டப் பூர்வமான ஒத்துழைப்பை நல்கி அமைதி காண முயற்சிகளை மேற்கொள்வதைத் தான் இந்த அரசு விரும்புகிறது. அதற்கேற்ப நடுநிலையோடு சிந்தித்து பொது மக்களின் அத்தியாவசிய தேவையான இந்தப் பிரச்சினையில் சுமூக முடிவு காண வேண்டும் என்பது தான் இந்த அரசின் நோக்கமாகும் என்பது திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. வேலை நிறுத்தம்; போராட்டம் என்பவை கோரிக்கைகளை வலியுறுத்தி அதில் வெற்றி பெறுவதற்காகத் தானே தவிர; யார், யாரை வீழ்த்தினார்கள் என்று பார்த்து வெற்றிக் கொடி நாட்டுவதற்காக இல்லை என்பதை சிந்தித்து பிரச்சினைகளும் விளைவுகளும் மக்களை எப்படித் தொடுகின்றன என்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே தமிழக அரசின் கருத்து.

................................................................................................

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,
சென்னை-9.